1986 நவம்பர் 17]

திரு. கே. முத்துவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அபிராமம்—முதுகுளத்தூர் சாலை மண் சாலையாக இருக்கிறது. ஆனால் 15 கிலோமீட்டர் தூரம் உள்ள அந்தச் சாலை வழியாகத்தான் தாலுக்காவினுடைய மையமாகிய முதுகுளத்தூருக்கு அபிராமத்திலிருந்து சுற்றுப்புற மக்கள் எல்லாம் செல்லவேண்டும். மழைக் காலங்களில் தண்ணீர் போய், போக்குவரத்திற்கு இடையூறாக கமுதியைச் சுற்றி 15 கிலோ மிட்டர் அதிகதூரம் செல்ல வேண்டிய காரணத்தை முன்னிட்டாவது, அந்த இடத்தில் பாலம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—50)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, எனக்குக் கொடுத்துள்ள குறிப்பின்படி வருடத்தில் 15 நாட்கள் தண்ணீர் ஓடுவதாகக் கொடுத்திருக்கிறார்கள். மற்ற நாட்களில் ஓடுவதில்லை. இதற்கு மொத்த செலவு 40 இலட்சம் ஆகும் என்றும் கணக்கு கொடுத்து இருக்கிறார்கள். ஏற்கனவே நான் முதல் கேள்விக்கு சொன்ன பதிலேதான் இதற்கும். நமக்கு இருக்கின்ற நிதிப்பிரச்சனை காரணமாக இப்படி ஒவ்வொன்றும் தள்ளிச்செல்கிறது. எனவே, நிதி நிலைமை சீராக இருக்கும்போது இதைப்பற்றி ஆலோசிக்கலாம்.

சென்ற ஆண்டில் வீணாகிய மின் உற்பத்தி.

36—(*வினா எண் 3050) திரு குமரி அனந்தன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்ற ஆண்டில் மின் உற்பத்தியில் வீணாகியது எவ்வளவு?

(ஆ) அதனைத் தடுக்க மேற்கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1984—85 ஆம் ஆண்டில் மின் உற்பத்தியில் வீணாகியது 18.36 சதவீதம்.

(ஆ) புதிய துணை மின்நிலையங்கள், கப்பாசிட்டர்கள், ஜெனரேட்டர், முதலியவைகளை அமைத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு மின் இழப்பை குறைக்க மின் வாரியம் முயற்சித்து வருகிறது,

[1986 நவம்பர் 17

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தமிழ்நாட்டில் வீணாகின்ற மின்சாரத்தை மற்ற மாநிலங்களிலே வீணாகிக்கொண்டிருக்கின்ற மின்சாரத்தோடு ஒப்பு நோக்கி நாம் அதிகமாக வீணாக்கிக்கொண்டிருக்கிறோமா என்கின்ற தகவலை நமது அமைச்சர் அவர்கள் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டிலிருந்து மின்சாரம் வீணாகுவதனுடைய சதவிகிதம் 18.93 ஆக இருந்தது. 1985–86-ல் 18.70 ஆக குறைந்திருக்கிறது. மற்ற மாநிலங்களில் மின்சாரம் வீணாகுவதனுடைய சதவிகிதம் 19.5-லிருந்து 21.0 ஆகும்.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, கள்ளத்தனமாக மின்சாரம் எடுப்பதும், நீண்ட நெடுந்தொலைவிலிருந்து மின்சாரத்தைக் கொண்டுவருவதும் லைன் லாசுக்கு காரணங்களாக அமைகின்றன. இவைகளைத் தடுக்கின்ற வகையில் சென்ற ஆண்டு ஏதாவது மின் திருட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டனவா? எத்தனை கண்டுபிடிக்கப்பட்டன? அவற்றின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக வினா கேட்டால் அதற்குப் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகமான லைன் லாசாகிறது என்று சொல்லப்படுகிறது. எனவே, அந்த லைன் லாசை குறைப்பதற்கான ஒரு நிபுணர் குழுவை அமைத்து குறுகிய காலத்திற்குள் அதுபற்றிய விவரங்களைக் கண்டறிந்து, அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க மாநில அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களைவிட நான் ஏற்கனவே சொன்னது போல் தமிழகத்தின் மின்சாரம் வீணாகுவதனுடைய சதவிகிதம் குறைந்த சதவிகிதம்தான். இருந்தாலும் புரட்சித் தலைவர் அரசு மின்சாரம் வீணாகின்றதை 15 முதல் 16 சதவிகிதம் குறைப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

திரு. வி. பி. சிந்தன் : தலைவர் அவர்களே, அனைத்திந்திய மின்சார அமைப்பின் சார்பில் ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டு லைன் லாஸை குறைப்பதற்கு, தடுப்பதற்குள்ள பல ஆலோசனைகளும் சொல்லப்பட்டன. தமிழக மின் வாரியம் அந்த ஆலோசனைகளைப் பரிசீலித்தது உண்டா அல்லது பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1986 நவம்பர் 17]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மின்சாரம் சம்பந்தமான பட்ஜெட் வரும்போது இது பற்றிய விவரத்தைத் தருகிறேன்.

அமராவதியில் எரிசாராய ஆலை ஏற்படுத்தும் திட்டம்.

37—(*வினா எண். 9552) திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கழிவுப் பாகை பயன்படுத்தி ''எரிசாராய ஆலை'' ஒன்று ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளரிடம் விண்ணப்பம் ஏதும் செய்யப்பட வில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர் : சபாநாயகர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று இயங்கிக்கொண்டு வருகிறது. இதுவரை 6 கோடி ரூபாய் நஷ்டத்தில் ஓடியது. இப்போது லாபத்தில் ஓடக்கூடிய ஒரு நிலையில் இருப்பதால் இனிமேலாவது அந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஒரு எரிசாராய ஆலையை அதனை ஒட்டி ஆரம்பித்து அதில் வரும் லாபத்தை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமாய் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் மூன்று, பெரியார் மாவட்டத்தில் இரண்டு, திருச்சி மாவட்டத்தில் ஒன்று, செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒன்று, தருமபுரி மாவட்டத்தில் ஒன்று என்று எட்டு வடிசாராயம் காய்ச்சும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இத்தகைய வடி சாராயம் காய்ச்சும் தொழிற் சாலையை அமைக்க வேண்டுமென்றால் தனியாக மனு செய்ய வேண்டும். அதன்மீது மதுவிலக்கு ஆணையர் அவர்கள் முடிவு செய்கிறார்கள். இது குறித்து மதுவிலக்கு ஆணையரைக் கேட்ட போது வடி சாராய ஆலைகள் தொடங்குவதற்காக யாரும் மனு கொடுக்கவில்லை என்ற தகவலைத் தந்திருக்கிறார்கள்.

திரு. பெ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயே மிகவும் லாபம் வருகிற தொழிற் சாலை எரிசாராயம் வடிக்கும் தொழிற்சாலை. இந்தத் தொழிற் சாலைகள் முழுவதும் தனியார் துறையில்தான் தற்போது இருக்கின்றன. ஒன்றுகூட கூட்டுறவுத் துறையிலோ அல்லது பொதுத்துறையிலோ இல்லை. தமிழகத்தில் 13 சர்க்கரை ஆலைகள்